Registered as a Newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 02 சனிக்கிழமை (18-09-1993) UTHAVAN—A Lively National Tamil Daily இதழ் 294

# நிதி அமைச்சர் பதவி விவகாரத்தால் ஜனாதிபதி, பிரதமர் இடையே லடாய்!

## ரணில் போர்க்கொடி

கொழும்பு, செப்டெம்பர் 18

நிதி அமைச்சர் பதவியை ஜனாதிபதி டி. பி விஜேதுங்க தொடர்ந்து வைத்திருப்பது அவருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்கும் இடையில் பிணக்கை ஏற்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதியின் போக்கிற்கு எதிராக பிரதமர் போர்க்கொடி உயர்த்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சிங்கள வார இதழான "லக்திவ" கடந்த ஞாயிறு பதிப்பில் தலைப்புச் செய்தியாக இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

நிதி அமைச்சர் பதவியை ஜனாதிபதி விஜேதுங்க தாமே

(6-ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் கடற்படையினர் தாக்கு

### மீனவரும், சிறுவனும் காயம்

யாழ்ப்பாணம், செப். 18

வடமராட்சி கிழக்கு கடற் பிராந்தியத்தில் இருந்து கடற்படையினர் நேற்றுக் காலை கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் இருவர் காயமடைந்தனர்.

வெற்றிலைக்கேணி கடற் பகுதியில் இருந்து காலை 7 மணிக்கு புறப்பட்ட கடற்படையினர் தாளையடி வரை வந்து மீண்டும் வெற்றிலைக்கேணிக்கு திரும்பிச் சென்றனர்.

அப்போது வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தாளையடி கரையோரப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் தொடர்ச்சியாக பீரங்கித் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் நடத்தினர்.

இந்த தாக்குதலின் போது வத்திராயன் தெற்கு பகுதியில் கரையில் இருந்து ஒரு மைல் தொலைவில் இலகுமார் குகதாஸன் (8 வயது) என்ற சிறுவனும், மருதங்கேணியில் கரையோரமாக கட்டுமரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த கணபதிப்பிள்ளை விஜயரட்ணம் (வயது 43) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-15)

## 31 மாணவர்கள் காணாமற்போன வழக்கு:

## நீதிமன்ற விசாரணைக்கு தூதரக அதிகாரிகள் வருகை

கொழும்பு, செப். 18

1989 ஆம் ஆண்டு டிசம்பரில் — ஜே. வி. பி. நடவடிக்கைகள் தெற்கில் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த வேளையில்—எம்பிலிப்பிட்டிய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 31 மாணவர்கள் இராணுவத்தினரால் கடத்தப்பட்டு பின்னர் காணாமற் போனதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

விசாரணைகளைப் பார்வையிட நோர்வே, நெதர்லாந்து, கனடா, பிரிட்டன், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளின் தூதரகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்.

காணாமற்போனதாகக் கூறப்படும் 31 மாணவர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதும்—

இந்த விடயம் குறித்து சாட்சிகளை விசாரித்து மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் படி கொழும்பு பிரதம நீதிவானுக்கு மேன்முறையீட்டு நீதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மக்கள் எழுச்சியுடன் தியாகி திலீபனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 18

தமிழ் மண்ணுக்காக — தமிழீழ மக்களுக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவாக தமிழீழ பகுதிகள் எங்கும் மக்கள் எழுச்சியுடன் அஞ்சலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வருகின்றனர்.

நேற்று மூன்றாம் நாளாக குடாநாட்டில் பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

நாளுக்கு நாள் வீதிகளிலும் வீட்டு வாசல்களிலும் நினைவுப் பந்தல்கள் அதிகரித்து வருகின்றன; மக்கள் அஞ்சலி நிகழ்ச்சிகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலைகளில் மாணவர்கள் திலீபனின் உருவப்படத்திற்கு மாலைகள் சூடி, மலர்கள் தூவி அஞ்சலி செலுத்துகின்றனர்.

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் ஏற்பாட்டில் தீவக மக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தில் சூடுபட்டு ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பிரதேசத்தில் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் துப்பாக்கி ரவைகள் வெடித்துச் சிதறியதில் வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவர் கையில் காயமடைந்தார்.

பாதுகாப்புப் பிரதேசமான — ஆஸ்பத்திரி வீதியில் — அடைக்கலமாதா கோயிலுக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மண்டைதீவு முகாமில் இருந்து படையினர் தீர்த்த வேட்டுக்களில் ஒன்றே இந்தப் பகுதியில் வெடித்துச் சிதறிய தாகத் தெரிவிக்கப்பட்டது;

யாழ். நகரில், கார் பட்டறை ஒன்றில் பணிபுரியும் — சண்டிலிப்பாயைச் சேர்ந்த— நாகலிங்கம் அன்ரன்ராஜ் (24 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

## குடாநாட்டில் 93 வீத குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிப்பு!

### பல்கலைக்கழக ஆய்வு தரும் அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள முகாம்களிலும், கிராமங்களிலும் வாழும் மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 93.5 சதவீத மானவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில், இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் மூன்று வயதுக்குக் குறைந்த குழந்தைகள் 60 ஆயிரம்பேர் உள்ளதாகக் கணக்கிடப்படுகிறது. அவர்களில் 4 ஆயிரத்து 250 குழந்தைகள் உடனடியாக போசாக்கு உணவளிக்கும் அதிதீவிர சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நிலையை எட்டி உள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமூக மருத்துவப் பிரிவினர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் கைதிகள் விடுவிக்க உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 18

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகள் தம்மை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலமாக ஸ்ரீலங்கா அரசைக் கோரியுள்ளனர்.

தாம் விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் —

விடுதலை தொடர்பாக தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையை தாம் இழந்து விட்டதாகவும் — அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர கடைகள் இன்று மூடப்படும்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த — வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இன்று மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

தியாகச் சுடர் திலீபனின் நினைவாக இன்று யாழ். வர்த்தக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருப்பதை முன்னிட்டு வர்த்தக நிலையங்கள் மூடப்படவுள்ளன. (ஒ-15)

## சித்த மருத்துவத்துறை தனிப் பிரிவாக இயங்கும்

### பல்கலை.மானிய ஆணைக்குழு முடிவு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையை கலைப்பீடத்தின் கீழிருந்து உடனடியாக நீக்கி, துணை வேந்தரின் கீழ் தனி ஒரு பிரிவாக தற்காலிகமாக இயங்கவைக்குமாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இத் தகவலை யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றத் தலைவர் தெரிவித்தார்.

கொழும்பு சென்ற பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவருடன் பேச்சு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு ஷெல்லினால் யாழ். நகரம் அதிர்ந்தது

மண்டைதீவு படை முகாமில் இருந்து நேற்றிரவு சுமார் 7.30மணியில் இருந்து 9மணி வரை யாழ்.நகரப் பக்கமாக விட்டு விட்டு ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன இதனால் நகரப் பகுதிகள் அதிர்ந்தன.

இவ்வேளையில் "பரா" வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டு,சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

கொட்டடி சேத்திரச் சந்திக்குச் சமீபமாகவும், கொட்டடி கரையோரப் பகுதிகளிலும் ஷெல் குண்டுகள் அடுத்தடுத்து பயங்கர சத்தத்துடன் விழுந்து வெடித்தன

ஷெல் சிதறல்களினால் கோணாந்தோட்டத்தில் வீட்டில் இருந்த இளைஞரான மகாதேவன் ஜனார்த்தனன் (16 வயது) என்பவர் காயமடைந்தார்; இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார். (ஒ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

செம்மணி இந்து மயான

அபிவிருத்தி/ பராமரிப்பு பரிபாலனசபை

அங்குரார்ப்பணம் சம்பந்தமான

## ஆலோசனைக் கூட்டம்

மேற்படி ஆலோசனைக் கூட்டம் 19-09-1993 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ்/ நல்லூர் சாதனா பாடசாலையில் இடம்பெறும். இந்த மயானத்தினைப் பாவிக்கும் சகல மக்களையும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபற்றும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

க. விவேகானந்தன்
செயலாளர்
(தற்காலிக நடவடிக்கைக் குழு)

இ. தங்கராசா
தலைவர்
(தற்காலிக நடவடிக்கைக் குழு)

(27349)

# இதயம் கனிந்த அஞ்சலி

பணி பல புரிந்த சைவத் திருத்தொண்டர்

உயர்திரு

## க. விசுவலிங்கம் ஐயா


அவர்கள்

யா/இடைக்காடு மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க ஸ்தாபகச் செயலாளராகவும், ஊதியம் பெறாது கல்விச்சேவை ஆற்றிய ஆங்கில ஆசானாகவும், அருள்மிகு இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான திருத்தொண்டராகவும், அரும் பெரும் சைவப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி ஆற்றிய உயர்திரு. க. விசுவலிங்கம் ஐயா அவர்களின் ஈடுசெய்ய முடியாத மறைவு குறித்து எமது இதயம் கனிந்த அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
பணியாளர், மாணவர்,
யா/இடைக்காடு மகா வித்தியாலயம்,
அச்சுவேலி.

(27344)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி
# இன்று எமது துயரநாள்



| அன்னையின் அருகில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 07 | 18 |
| 03 | 09 |
| 1935 | 1990 |

## சு. சண்முகநாதன்
[சானா]

(கல்வி அதிகாரி — S.L.E.A.S.,
வேலணைக் கோட்டம்)

தொடிப்பொழுதிற் குங்குமம் நுதலில் அழிந்திட
இடி தலைமேல்விழ ஏங்கி நின்றேனே
தர்மமே இல்லையா? தலை விதிவென்றதே
இறைவா! இது முறையா? எதுவும் என் பாவமா?

தெய்வமே! உனை இழந்து வாழ்வின் ஒளி இழந்து
மனமுடைந்து, நடை தளர்ந்த நிலையிலே
பிள்ளைகளின் பாசத்தாற் பிணைக்கப்பட்டு
வாழ்கிறேன்.
கண்ணீரிற் காலம் இங்கே, களிப்பு உன்னோடு
போனதே!

கண்ணை இமைகாப்பது போல் காக்கும் தந்தை
கணப் பொழுதும் எம்மைப் பிரிந்து இருக்கமாட்டார்
இன்றும் எமை வழி நடத்தி ஏற்றி வைத்து
இறைவனுடன் ஒன்றாகி நின்று காக்கின்றார்.

உங்களை நாள் தோறும்
நினைத்து வருந்தும்

மனைவி, பிள்ளைகள்,
உடன்பிறந்தார், சுற்றத்தார்.

(27351)

தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக

# உண்ணாவிரதம், சிரமதானங்கள்: நாளை நடைபெறும் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப் 18

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாட்களை ஒட்டி குடாநாட்டில் அடையாள உண்ணாவிரதங்கள், சிரமதானப் பணிகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாளை நடைபெறவுள்ள உண்ணாவிரத நிகழ்வுகள் வருமாறு:-

வலிகாமத்தில்

★ சங்கானை — அரசடி வைரவர் கோவிலடியில், சங்கானைப் பிரதேச வர்த்தகர் சங்கம்.

★ கோப்பாய் — நீர்வேலி வாய்க்கால்தரவை பிள்ளையார் கோயில் முன்றிலில் - புத்தூர் சிற்றூர் மக்கள்.

★ சண்டிலிப்பாய் — ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலில் மானிப்பாய் வர்த்தகர் சங்க ஊழியர்.

★ உடுவில், தெல்லிப்பழை — சுன்னாகம் சிவன் கோவில் முன்றலில், தாவடி சிற்றூர் மக்கள்.

★ யாழ்ப்பாணம் — நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில், யாழ் மத்தி சிற்றூர் மக்கள்.

★ நல்லூர் — நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில், நல்லூர் ப. நோ. கூ. வர்த்தக சங்கங்கள்.

வடமராட்சியில்

★ கரவெட்டி — நெல்லியடி வர்த்தகர் சங்கம், சாமியன் அரசடி ஆகிய இடங்களில் நெல்/துன்னாலை மத்தி, மேற்கு சிற்றூர் மக்கள், சங்க உறுப்பினர்கள்.

★ உடுப்பிட்டி — உடுப்பிட்டி மத்தி வைரவர் கோயிலடியில், உடுப்பிட்டி வட/தெற்கு மக்கள்.

★ பருத்தித்துறை — அல்வாய் முத்துமாரியம்மன் கோயிலடியில், புலோலி தெற்கு, மந்திகை மக்கள்.

தென்மராட்சியில்

★ பளை — பளை பிரதேச சபை முன்றிலில், தென்னந்தோட்ட ஊழி, வர். சங்கம், சிறீமுருகன் கல்வி நிலையம்.

★ கொடிகாமம் — ரயில் நிலையம் அருகில், கருணாவாசம், மந்து. சின். சந்தை, அல். தெற். தனம் கல்வி, நிலை. வடமர. கல்வி நிலையம்.

★ சாவகச்சேரி — மனம்குணாய் கோயில் முன்பாக, கோயில் குடியிருப்பு, சர. வடக், கெளு. மப். தெற், தும்பு. தொழி. வர்த்தகர், சங்கம், வகுப்பு. தொழி சங்க மீசாலை மேற்கு கலை மகள் கல்விநிலையம், அருண் கல்வி நிலையம், யுபிற்றர் கல்வி நிலையம்.

★ கைதடி — கைதடி சந்திக்கு அருகில், கைதடி வட, சிற், உதய சூரி. ச. ச. நி, கைதடி வட, மாதர் சங்கம், நியூட்டன் கல்வி நிலையம், ஒக்ஸ்போட் கல். நி.

★ திவகக் கோட்டம் — நல்லூர் கோயில் முன்றிலில், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், செல். ஜோன்ஸ் அக்கடமி, மணியரசன் குடியிருப்பு.

சிரமதானம்

நாளை சிரமதான நிகழ்வுகள் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

சுழிபுரத்தில் மு. சுத்தம் செய்தல்.

★ ஏழாலை வைத்தி துப்புரவு.

★ யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியில் நாவலர் வீதி, ஆசாத் வீதி துப்புரவு.

★ நல்லூரில் கொண்டலடி ச. ச. நி. வீதி துப்புரவு.

★ கரவெட்டி தெற்கு மாதிரிக் கிராமத்தில் சூழல் சுகாதாரம் பேணல், சு. செய்தல்.

★ உடுப்பிட்டியில் கொற்றியகாடு பொதுசந்தை துப்புரவு.

★ பருத்தித்துறையில் அல். வட, அம். பாட, சுற்றாடல் துப்புரவு. [அ]

## A/L PAPER CLASS

| | |
|---|---|
| Che. | சிவசோதி |
| Phy. | ஜெயதாசன் |
| Bot. | சிவவீரசிங்கம் |
| Zoo | செல்வநாயகம் |
| Pure. App | முருகையா |

ஆரம்பம்:
18-09-93

BOND INSTITUTES
யாழ்ப்பாணம்.
(27389)

## A/L 94, 95

(சனி, ஞாயிறு வகுப்புக்கள்).

வர்த்தகம்-பகுதி 1

ஆரம்பம்:
19 — 09 — 1993
(7-00 a.m. — 8-00 a.m.)

ஆசிரியர்கள்:
திரு தேவா
திரு. சத்தியதாசன்

விக்னா
கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.
(இ-6111)

வலி. இ. தெ. ப. ம. நோ. கூ. சங்கம்
நீர்வேலி.

# 24ஸ்ரீ9984 (லேலண்ட்) லொறி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

மேற்படி சங்கத்தின் 24ஸ்ரீ9984 இலக்க அசோக் லேலண்ட் லொறியை விற்பனை செய்வதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறித்த லொறி வாங்க விரும்புவோர் தமது கேள்வி விண்ணப்பங்களை 24-09-93ஆம் திகதிக்கு முன் "பொது முகாமையாளர், வலி-கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். நீர்வேலி" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம். கேள்வி விண்ணப்பம் அனுப்பப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "லொறிக்கான கேள்வி விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும்.


குறித்த லொறியை பார்வையிட விரும்புவோர் சங்கத் தலைமையலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்.

நீர்வேலி,
1993 - 09 - 18.

(இ-5935)

# ஓராண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 28 |
| 08 | 09 |
| 1940 | 1992 |

## அமரர் ச. பாலசிங்கம் [பாலா]

[முன்னாள் உதயன் ஊழியர், முன்னாள் வாக்கஸ் ஊழியர்]

திதி: 18 - 09 - 1993

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்த குடும்பத்தின் குலவிளக்கே, நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்ற போதும் எப்படி அப்பா உங்களை மறப்பது?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் துயரில் வாடும்

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

344/1, 3 ஆம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை.

(6498)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

முல்லைத்தீவு, மன்னார், கிளி. பாடசாலைகளுக்கு

# ஆய்வுகூட உபகரணங்கள் அனுப்ப ஒருங்கிணைப்பு குழு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், செப். 18

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்குரிய ஆய்வுகூட உபகரணங்களை அந்த மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக ஆய்வுகூட உபகரணங்களை வடக்கே எடுத்து வர கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்து வந்தது. இதனால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி ஆய்வுகூட உபகரணங்களை கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல அந்தந்த மாவட்ட கல்வி அதிகாரிகள் கொழும்பில் அனுமதி கோரியிருந்தனர். ஆனால் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அதற்கு அனுமதி வழங்கவில்லை எனத் தெரியவருகிறது.

இதேவேளை — மன்னாரில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி பாடசாலைகளுக்குத் தேவையான ஆய்வுகூட உபகரணங்களை மட்டும் அங்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(த-5-9)

## முக்கிய கலந்துரையாடல்

யாழ். நகர் சகலதுறை வர்த்தகர்களுக்கும் ஓர் முக்கிய கலந்துரையாடல் 20 - 09 - 1993 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ் வர்த்தகர் சங்கப் பணிமனையில் நடைபெறும். யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள். சகலதுறை வர்த்தக உரிமையாளர்களும் தவறாது குறித்த நேரத்தில் வருகை தந்து, கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மிக முக்கியமான விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் சகலதுறை வர்த்தகர்களும் கண்டிப்பாக கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் சார்பில் அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி வணக்கம்

இங்ஙனம்,
பொதுச் செயலாளர்,
யாழ். வர்த்தகர் சங்கம்.

(இ-6117)

உ

நல்லூர் பாணன்குளம்
## நாச்சி அம்பாள் தேவஸ்தானம்
## புரட்டாதி மாத (சனீஸ்வர) வார நவக்கிரஹ (சனீஸ்வரர்) ஹோமம்

சனீஸ்வர பகவான் பிரார்த்தனை

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தா! தா!

மெய் அடியார்களே!

ஹோமத்தில் கலந்து கொண்டு நவக்கிரஹ நாயகர்களுக்கு தண்ணீர் ஊற்றி, எள் தீபம் ஏற்றி, வரும் இன்னல்களை அகற்றி, நல்வழி நடத்த இறைவியையும், சனீஸ்வர பகவானையும், குருபகவானையும் வணங்கி அருள்பெறுவீர்களாக.

★ காலம்: 18 – 09 – 1993 சனிக்கிழமை
நேரம்: காலை 9மணி
உபயம்: திரு. செல்லத்துரை மகேந்திரன்
முத்தவிநாயகர் வீதி,
நல்லூர்.

★ காலம்: 25 – 09 – 1993 சனிக்கிழமை
நேரம்: காலை 9 மணி
உபயம்: திரு. லோகேஸ்வரன்
(உரிமையாளர்)
கிருஷ்ணா புடவை மாளிகை,
மக்கள் நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

★ காலம்: 02 – 10 – 1993 சனிக்கிழமை
நேரம்: காலை 9 மணி
உபயம்: திரு. நவபாலன் குடும்பம்
முத்த விநாயகர் வீதி,
நல்லூர்

★ காலம்: 09 – 10 – 1993 சனிக்கிழமை
நேரம்: காலை 9 மணி
உபயம்: திரு. சிவஸ்ரீ பாலசுப்ரமணியக் குருக்கள்-
குடும்பம்
நாயன்மார் வீதி,
நல்லூர்.

★ காலம்: 16 – 10 – 1993 சனிக்கிழமை
நேரம்: காலை 9 மணி
உபயம்: திரு. காசிநாதர் வர்ணகுலசிங்கம்-
குடும்பம்
நாயன்மார் வீதி,
நல்லூர்.

சுபம்

(87841)

## ஆலயங்களில்

வட்டுக்கோட்டை மேற்கு களவியோடையம்பதி பிங்கல மோதக மாமரப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை பத்தாம் திருவிழாவுடன் நிறைவெய்துகிறது. நாளை விநாயக சதுர்த்தியும், திங்கட்கிழமை சங்காபிஷேகமும், அன்னதானமும் நடைபெறும். (வ)

o o o

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் அலங்கார உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் 15 நாட்கள் நடைபெறும். (வ)

o o o

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 29ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

தினசரி இரவு 8 மணிக்கு பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வர சர்மா "விநாயக புராணம்" எனும் பொருளில் ஆத்மீகத் தொடர் விரிவுரை நிகழ்த்துவார். (க-110)

o o o

தொல்புரம் மடத்துப்பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (க-28)

o o o

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் புரட்டாதி சனீஸ்வர வழிபாடு இன்று சனிக்கிழமை நடைபெறும். (வ)

குமணவில் செல்லும் நோயாளர்கள்

# பாரம் கூடிய பொதிகளை எடுத்துச் செல்லத் தடை

யாழ்ப்பாணம், செப். 18

'குமண' கப்பலில் பயணம் செய்யும் நோயாளர்கள் சுமக்க முடியாத பாரம் கூடிய பொதிகளை தம்முடன் எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு தடை விதித்துள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்தோ அல்லது கொழும்புத் துறைமுகத்தில் இருந்தோ அளவுக்கு அதிகமான, சுமக்க முடியாத பொதிகளை நோயாளர்கள் குமணவில் எடுத்துச் செல்ல முற்பட்டால் அவை இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்படும் என்றும் ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது. (த-17)

பாஷையூர் பகுதியில்

# சுகாதார கேடு விளைவிக்கும் மலசல கூடக் குழிகள்

அரியாலை, செப். 18

பாஷையூர் பகுதியில் 10 மலசல கூடங்களின் குழிகள் வெடித்ததைத் தொடர்ந்து அப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரக் கேடாகவும் அமைந்துள்ளது.

இம் மலசல கூடங்களின் குழிகளை உடனடியாகப் புனரமைத்துத் தருமாறு பாஷையூர் மக்கள் முன்னேற்ற சங்க சனசமூக நிலையம் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரியைக் கேட்டுள்ளது.

இதேவேளை— பாஷையூர் பிரதான வீதியில் உள்ள கழிவு நீர் ஓடும் வாய்க்காலும் கடந்த சில நாட்களாக துப்புரவு செய்யப்படாமல் கழிவு நீர் தேங்கியுள்ளது. இதனால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (த-17)

# குடும்பநல சேவையாளருக்கு பற்றாக்குறை நிலவுகிறது

யாழ்ப்பாணம், செப். 18

வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் குடும்பநல சேவையாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

மூவாயிரம் குடும்பங்களுக்கு ஒரு குடும்பநல சேவையாளர் என்ற அடிப்படையில் பணிப்பாளரின் நிர்வாகத்திற்குள் அடங்கும் — யாழ். மாவட்டத்தில் 93 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 40 பேரும் என மொத்தமாக 333 பேர் இருக்க வேண்டிய இடத்தில் தற்போது யாழ். மாவட்டத்தில் 73 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 12 பேருமே பணியாற்றுகின்றனர்.

இதற்கிடையில் சென்ற வருடம் ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற குடும்பநல சேவையாளர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சையில் சித்தியடைந்த 19 பேருக்கும் யாழ். மாவட்டத்திற்கு பணியாற்றவென இம்மாதம் முதலாம் திகதி முதல் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (த-162)

# சென்னைக் குண்டு வெடிப்பு; முஸ்லிம் ஒருவர் கைது

சென்னையில் அண்மையில் இடம்பெற்ற ஆர். எஸ். எஸ். கட்டடக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக சென்னையைச் சேர்ந்த ரசீக் அஹமது என்ற நபர் கைது செய்யப்பட்டார்.

தடா சட்டத்தின் கீழ் இவர் காவலில் வைக்கப்பட்டார்.

இவர் வசித்து வந்த பகுதியில் வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்த வயர் துண்டுகளும் உலோகப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ-எ)

நீண்ட கால இடைவெளிக்குப் பின்
மீண்டும் உங்கள் கைகளில்.....

## ஐஸ்கட்டி

கடற்றொழிலாளர்களே!
இறைச்சி விற்பனையாளர்களே!!
குளிர்பான உற்பத்தியாளர்களே!!!
உங்கள் பொருள்கள் ஐஸ் இன்றிப் பழுதடைகின்றனவா?

கவலையை விடுங்கள்!

புதிய தொழில்நுட்பத்துடன்
உங்கள் தேவையை நிறைவேற்றவும்
உங்கள் இல்ல வைபவங்களை குளிர்மையாக்கவும்
உங்களுக்குத் தேவையான ஐஸினைப் பெற

நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

"ஐஸ் தொழிலகம்"

உதயம் பல்பொருள் அங்காடி கட்டட தொகுதி,
அரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(இ-5933)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அழகிய வெள்ளை நிற பொமனேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு இல 74/2, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (27343)

பண்ணை கோழிகள், குஞ்சுகள், பன்ரம் கோழிகள், சேவல்கள் விற்பனைக்குண்டு. செல். யூட்ஸ், 382, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்தி), யாழ்ப்பாணம். (27326)

## இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் சனி, ஞாயிறு, புதன் கிழமைகளில் காலை 8-30—11-00 வரை சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27340)

இறைச்சிக்கோழி தொகையாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு தொடர்பு 698/15, தலையாழி (வைரவர் கோவிலடி), சபாபதி வீதி, யாழ்ப்பாணம். (27307)

## வாங்குகிறோம்

தப்புரவான வேப்பம் விதை, வேப்பம் கோது, இலுப்பம் விதை விலைக்கு வாங்குகிறோம். "மிக்கைவற்". (இ-5981)

## வியாழமாற்றம் நன்மையா

12 - 10 - 93இல் நிகழும் வியாழமாற்றம் நன்மை பயக்குமா? உலக இலங்கை பலன்கள் உட்பட 12 இராசிகளுக்குமான பலாபலன்கள். வெளியீடு: திருக்கணித நிலையம். 10/- மட்டுமே. கிடைக்குமிடம்! ஆசீர்வாதம் சாவகச்சேரி. (27180)

## லான்ட்மாஸ்ரர்

மிகவும் நல்ல நிலையிலுள்ள மிற்சுபிசி சக்தி 10 H. P. லான்ட்மாஸ்ரர் ஓடும் புதிய பெட்டியுடன் விற்பனைக்குண்டு. மின் வேலைகளுக்கு உகந்தது. தொடர்பு இல. 48/1, 1ஆம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (6491)

## குளிர்பானங்கள்

Sunrise குளிர்பானங்கள், கோடியக்கள் சுத்தமானவை சுவையானவை பருகிச் களிப்படைவீர். தயாரிப்பு விநியோகம்: Siva Industries, 35/3, Colombagam Road, Chundukuli. (இ-6049)

## ENGLISH

G. C. E. (O/L) 93 Spoken-English, with Grammar, G. A. Q. (E. S. L.) 94, ஆகியவற்றிற்குரிய விசேட ஆங்கில வகுப்புக்களின் புதிய பிரிவுகள் [14-9-93] செவ்வாய் ஆரம்பமாகிவிட்டன. மாணவர்களின் வசதிக்கேற்ப நேர அட்டவணை வழங்கப்படும். தொடர்பு: R. சிவலிங்கம், (Dip-in-Eng.) புதிய ஆங்கில கல்வி நிலையம், 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். (இ-6095)

## ஆண்டு - 4 வகுப்பு

ஆண்டு 4 (புலமைப்பரிசில் 1994) தூர இட மாணவர்க்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 18-09-93 சனி பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும். சனி, ஞாயிறு இருநாட்களும் 400—600 வகுப்பு நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27327)

## ஆண்டு - 4 புலமைப்பரிசில்

ஆண்டு 4 (புலமைப் பரிசில் 1994) மாதிரித் தொடர் பரீட்சை (பதினொன்றாவது) 19-9-93 ஞாயிறு மு. ப. 8-00, 11-00 நடைபெறும். வினாத் தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27328)

## சோதிடம்

கைப்பலனறிஞர் - கோளறிவாளர், கைரேகை சாதகம் கொண்டு தங்கள் பிரச்சினைகளுக்கான தீர்க்கமான ஆலோசனை கிடைக்கவும், பிறநாட்டுச் சாதகங்கள், மணமாகாதவர்கள், மணமகன், பட்டம், குணாதிசயங்கள் போன்றவிவரங்களை அறியவும், திருமணப்பொருத்தங்கள் பார்க்கவும், முகூர்த்தங்கள் குறிக்கவும் அழைக்கின்றோம். இராசேந்திரன், கோயில் வீதி, (முதல் வீடு) கொக்குவில் கிழக்கு. (27283)

# மஹா கணபதி ஓமம்

யா/அடலியடைப்பு புதறாணை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் 19 - 09 - 1993ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் சதுர்த்தி திருவிழாவன்று தமிழீழ மக்களின் சுபீட்சத்திற்காகவும், நாட்டிற்கு அமைதியையும் வேண்டி மஹா கணபதி ஓமம் இணுவில் பிரம்மஸ்ரீ மகாதேவாக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. சகல மக்களையும், அடியார்களையும் கலந்து இறைவன் அருள் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- பரிபாலன சபையினர்.

(27329)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 09 | 19 |
| — | — |
| 10 | 08 |
| — | — |
| 1933 | 1993 |

அமரர்

## செல்லையா கனகசபாபதி

(முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர், சங்கானை)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
உறவினர்கள், பேரப்பிள்ளைகள்;

28, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை. (27302)

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 28 | 18 |
| — | — |
| 02 | 09 |
| — | — |
| 1918 | 1992 |

## அமரர் மா. அ. இராசையா

(அப்புஜி)

(இளைப்பாறிய அதிபர்)

பொன்னான இதயமும் போதுமென்ற மனமும்
பொறுமையும் அனைவருக்கு முதவும் முழுமையும்
தேனார்ந்த சொல்லுமதில் தெவிட்டாத இனிமையும்
செறிந்துற்ற கல்வி வளமும்
கானமாய் நிறைந்துற்ற கனிவான வாழ்வும் பெற்றீர்!

நிலைக்காது உடலென்று அறிவோம் நாம்
உன்னுடைய நித்தியத்தில் அமைதி பெறுவோம்
காலமெல்லாம் உன் நினைவைக் கருத்தோடு -
கூர்வோம்
இறைபதத்தில் நிறைவு பெறுவாய்!

மனைவி, பிள்ளைகள்;
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

80, வைமன் வீதி,
நல்லூர். (27843)

# 50ஆவது நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும்



## அரியநாயகம் லிங்கநாயகம்

(லிங்கன்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 23 - 05 - 1960 | 31 - 07 - 1993 |

வண்டனில் மரணமான செய்திகேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தமைக்கும், இரங்கல் செய்திகள் அனுப்பியமைக்கும், வேறு பல வழிகளில் உதவியமைக்கும் ஆத்ம சாந்திப் பூசையில் பங்கு கொண்டமைக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக என்றும் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, மகன்,
அப்பா, அம்மா, பெரியம்மா,
தங்கச்சிமார், தம்பி, அத்தான்மார்,
மாமாமார், மாமிமார், மச்சான்மார்,
மச்சாள்மார், மருமக்கள்.

198, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 27 | 03 |
| — | — |
| 02 | 09 |
| — | — |
| 1933 | 1989 |

## அமரர் நாகர் கதிரேசன்

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரும், ஓய்வு பெற்ற கிராம சேவையாளரும்)

திதி: 18-9-1993

ஆண்டு நான்கு ஆனதப்பா!
ஆருயிரே எமைப்பிரிந்து
மீண்டும் உமை எப்போது
மேதினியில் காண்பதுவோ
நீண்டதூரம் போய் எமக்கு
நீள் துயரம் தந்தீரே!
என்றும் எம் உள்ளத்தில் - உம்
பாதம் பதித்தோமே
எம்துயரம் மாறாதப்பா
எங்கள் கண்ணீர் ஓயாதப்பா!

பாசத்துடன் எம்மை வழிநடத்திச் சென்ற எம் இனிய தலைவரே! எம் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்; அப்பா உன் சின்ன மகளை சஜிதா குட்டி என்று அழைக்கும் இனிய குரலை எப்படித் துறந்தீர்! அப்பா, உங்கள் நினைவுகள் எத்தனை ஆண்டுகள் சென்றாலும், எங்களால் மறக்க முடியாது அப்பா!

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்.
(கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளை)

சூரியகுமார் வேன்,
உடுவில். (27276)

## உதயன்

### அரசின் அடி உறைக்குமா?

மாணவர் இலவச மதிய உணவுத் திட்டத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தால் சுமார் 42 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கை நாட்டின் மக்களில் எழுபது சத விதத்துக்கும் அதிகமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வரும் வசதி குறைந்த மக்களாவர். அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோரின் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று கல்வி அறிவு பெறுவதை ஊக்குவிக்கும் முகமாகவும், வறுமை காரணமாக போதிய உணவின்றி போசாக்கின்மையால் வாதிப்புறுவதைத் தடுக்கும் முகமாகவுமே மதிய உணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மூன்றாம் உலக நாடுகளுக்குப் பிரதம கடன் வழங்குநராக விளங்கும் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் பொதுவாகவே மானியம் வழங்கி, குறைந்த விலையில் பாவனைப் பொருள்களை வழங்குவதையும், மக்களுக்குரிய சேவைகளுக்கு குறைந்த கட்டணம் அறவிடுவதையும் நிறுத்த வேண்டும் என்ற கொள்கை உடையவை.

அதன் காரணமாக அவை இரண்டும்,மூன்றாம் உலக நாடுகளின் அரசுகளுக்குப் பொருளாதார, நிதி, வருவாய் சம்பந்தப்பட்ட துறைகளில் அடிக்கடி நிபந்தனைகளை விதித்து நெருக்குதல் கொடுப்பது நடைமுறை வழமையாகிவிட்டது. தமது கட்டளைக் காட்டி உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் தங்கள் எண்ணத்தை எப்படியோ எய்தி விடுவது உண்டு. இலங்கையில் மாணவர் மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்படுவதும் அத்தகைய நிகழ்வுகளில் ஒன்றே!

கொழும்பு அரசைப் பொறுத்தவரையில், நாட்டின் வளங்களில் கணிசமான அளவை யுத்தத்துக்குச் செலவிடுகிறது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு வெளியில் இருந்து கிடைக்கும் பணத்தில் பெரும் பகுதியை யுத்தச் செலவுக்கு மறைமுகமாக ஒதுக்குகிறது. ஆகையால் உலக வங்கி விதிக்கும் எந்த நிபந்தனையையும் ஏற்றுக் கொண்டு கட்டளை வாங்குவதைத் தவிர வேறு வழி இல்லை!

யுத்தத்தை நிறுத்தும் உத்தேசம் இருந்தாலாவது, முக்கியமான சமூகநலத் திட்டங்களில் கைவைமாது வேறுவிதமாகச் சமாளிக்கலாம்; சமிக்கட்டலாம். ஆனால் ஸ்ரீலங்கா அரசு போரை மென்மேலும் தீவிரப்படுத்தி அதற்கான ஆயுத, ஆளணிகளை அதிகரிக்க முனையும்போது, எப்படியோ சமூகநலத் திட்டங்கள் பாதிப்படையவே செய்யும்.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல், தமது தலைவர்கள் தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை நாடி இரத்தக் களரியை நீடித்து வருவதைக் கண்டும் காணாதவர்களாக இருந்து வருகிறார்கள் சிங்கள மக்கள். தட்டிக்கேட்காதிருக்கிறார்கள்.

யுத்தத்தின் விளைவு தமிழர்களை மட்டுமன்றி தங்களையும் பாதிக்கும் என்பதை வெளிப்படையாக, அனுபவ ரீதியாக உணரச் செய்யும் பெரிய அடியாக மதிய உணவு நிறுத்தத்தைக் கொள்ளலாம். ஆனால் அந்த அடியின் உறைப்பு சிங்கள மக்களை விழிக்கச் செய்யுமா? யுத்தத்தால் தமக்கு மட்டுமல்ல தமது பல சந்ததிகளுக்கும் பாதிப்பு உண்டாகப் போவதை உணராதவர்களாகத் துயிலும் சிங்கள மக்கள் விழித்துக்கொண்டால் சரி இல்லையேல் யார் என்ன செய்ய முடியும்?

## ‘சுபநேரத்தில்’ காமினி ஐ.தே.கவில் இணைவார்

### தேசிய பட்டியல் மூலம் எம்.பியாவார்

கொழும்பு, செப். 18

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்க விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் எம் பி.யாக நியமிக்கப்படவிருக்கின்றார்.

பின்னர் ஒரு திகதியில் முன்னணியின் இன்னொரு தலைவரான ஜீ. எம். பிரேமச்சந்திர எம் பி.யாக நியமிக்கப்படுவார்.

இருவரையும் எம். பி.யாக நியமிப்பது என்று ஐக்கிய தேசியக் கட்சி எடுத்த முடிவை செயல்படுத்துவது, ‘‘சுப நேரம்’’ ஒன்றைக் கண்டு பிடிப்பது காரணமாகவே தாமதப்பட்டு வருவதாக அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ‘‘சண்டே ஐலண்ட்’’ தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஜ ஐ. தே. மு தலைவர்கள் இருவரையும் எம். பி.களாக்கிடம் முடிவுக்கு ஆரம்பத்தில் தாங்கள் காட்டிவந்த எதிர்ப்பை ஐக்கிய தேசியக் கட்சியின் சில பிரிவினர் இப்போது கைவிட்டு விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எம் பி. பதவிகளைப் பெறுவதற்கு பதிலாக மேல் மாகாண சபையின் நிர்வாகத்தை ஐக்கிய தேசியக் கட்சி பெறுவதற்கு உதவ ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சம்மதம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (உ-ஓ-எ)

## ஐ. ஐ. தே. மு.வில் சிறிமானி; முக்கியஇடம் அளிக்க முயற்சி

### கட்சியின் தலைமையில் அதிருப்தி

கொழும்பு, செப். 18

லலித் அத்துலத் முதலியின் கொலைபற்றி விசாரிப்பதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு கோருவதற்கு ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் தலைமைத்துவம் தயக்கம் காட்டி வருவதாக அக்கட்சியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் கருதுவதாக பத்திரிகையாளரான எக்மோ பெர்னாண்டோ பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார்.

அடுத்தமாத முற்பகுதியில் ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் செயற்குழுக் கூட்டம் நடைபெற உள்ளது.

ஆணைக்குழு நியமிக்கக் கோரும் பிரச்சினை இச்செயற்குழுக் கூட்டத்தில் கிளப்பப்படும் என்றும் —

லலித்தின் மனைவி சிறிமாணிக்கு கட்சியில் முக்கிய இடம் அளிப்பதற்கு செயற்குழுக் கூட்டத்தில் லலித்தின் ஆதரவாளர்கள் முயலக்கூடும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## திருகோணமலையில் மின் உற்பத்தி நிலையம் திட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, செப். 18

திருகோணமலையில் நிலக்கரியில் இயங்கும் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்கும் திட்டத்தை இலங்கை மின்சார சபை கைவிட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தை அமுல் நடத்துவது தொடர்பான பூர்வாங்க ஆய்வு வேலைகளுக்கு மட்டும் மின்சார சபை 20 கோடி ரூபாவை செலவு செய்து இருந்தது.

பூர்வாங்கத் திட்டத்தின்படி இந்த மின் உற்பத்தி நிலையம் ஆயிரம் மெகாவட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறமையுடன் இயங்குவதாக இருந்தது.

கனடிய நிறுவனம் ஒன்றின் உதவியுடன் எதிர்ப்புகளின் மத்தியிலும் திருமலையில் அமைக்கப்படுவதாக இருந்த இம்மின் உற்பத்தி நிலையம் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆட்சேபத்தைத் தொடர்ந்து தற்போது கைவிடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஹிங்குராக்கொடாவில் சர்வதேச விமான நிலையம் ஒன்று நிறுவப்படவுள்ளதை சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் தனது ஆட்சேபத்துக்குக் காரணமாகக் காட்டியது.

நீர்கொழும்புக்கு அருகில் ஓரிடத்தில் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு மின்சார சபை தற்போது திட்டமிட்டு வருகிறது.

ஆனால் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் இம்மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கும் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. (த-எ)

## நாளை விநாயகர் சதுர்த்தி

யாழ்ப்பாணம், செப். 18

குடாநாட்டில் உள்ள விநாயகர் ஆலயங்களில் நாளை சதுர்த்தித் திருவிழா சிறப்பாக நடைபெற உள்ளது

பின்வரும் ஆலயங்களில் விசேட அபிஷேகம், பூசைகளுடன் சதுர்த்தித் திருவிழா நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது:

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில், சச்சமோட்டை சுவட்டிப்புலம் ஸ்ரீஞானவைரவர் கோயில், தென்இன்னை யம்பதி செட்டிக்குவிப்பான் விநாயகர் ஆலயம், கொழும்புத்துறை அத்தியம்பதி ஸ்ரீசந்திரசேகரர் விநாயகர் கோயில், கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் கோயில்,

இன்பர்சிட்டி சித்திவிநாயகர் கோயில், தென்புலோலி முறாவில் பிள்ளையார் கோயில், பருத்தித்துறை பன்னையம்பதி பிள்ளையார் கோயில் புற்றளை சித்தி விநாயகர் கோயில், மந்திகை அரசினர் வைத்தியசாலை விநாயகர் ஆலயம் —

சுழிபுரம் பறாளாய் விநாயகர், வட்டு கிழக்கு பிள்ளைத்தை கற்பகவிநாயகர் ஆலயம், அராலி மேற்கு நொச்சிலம்பதி விநாயகர் ஆலயம்.

(அ-க-30-178-161-88)

## வாதுவ திரும்பியது

யாழ்ப்பாணம், செப். 18

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கி முடித்துவிட்டு ‘‘வாதுவ’’ கப்பல் நேற்று கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. வெளியூர்களுக்கான தபால் பொதிகளும் கப்பலில் எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை காங்கேசன் துறையில் தரித்து நின்ற ‘‘குமண’’ கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்து பொருள்கள் இறக்கும் பணியில் ஈடுபட்டது. (ஓ-8-17)

## 35,000 ரிசேர்வ் பொலீஸார் சகல சலுகைகளும் பெறுவர்

கொழும்பு, செப் 18

‘‘ரிசேர்வ்’’ பொலீஸ் சேவையின் கீழ் சேவையாற்றி நாட் சம்பளம் பெற்றுவரும் 35 ஆயிரம் பேருக்கும், நிரந்தர பொலீஸ் சேவையில் உள்ளவர்களுக்கான சகல வசதிகளையும் வழங்க அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

அவர்களுக்கு இனிமேல், நிரந்தர பொலீஸ் சேவையில் உள்ளவர்களைப்போல மாதச் சம்பளம் மற்றும் படிகள், விடுமுறை வசதிகள், பதவி உயர்வு என்பன வழங்கப்படவிருக்கின்றன. (உ 6)

## இதழியல் கற்கை நெறி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு நடத்தும் ‘‘இதழியல் — அறிமுகக் கற்கைநெறி’’ இன்று ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் 24ஆம் திகதி வரையான ஆறு வாரங்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இக்கற்கை நெறிக்குரிய வகுப்புகள் நடைபெறும்.

பத்திரிகைத் துறைசார்ந்த பாடங்களை பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பத்திரிகைத் துறை அனுபவம் உள்ளவர்கள் போதிக்க உள்ளனர்.

கற்கை நெறியின் ஆரம்ப விழா இன்று பிற்பகல் 2-30 மணிக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆரம்ப உரை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மூன்று நாளிதழ்களின் ஆசிரியர்கள் சிறப்புரைகள் ஆற்றுவர். (அ

★ ★ ★

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புறநிலைப் படிப்புகள் அலகு நடத்தும் ‘‘உளவளத் துணை: ஓர் அறிமுகக் கற்கை நெறி — தொகுதி II’’ ஆரம்ப வைபவம் இன்று பிற்பகல் 2 மணி முதல் 2.30 மணிவரை யாழ். பல்கலைக் கழக வர்த்தக முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உளநலத் துறைத் தலைவர் கலாநிதி த. ஜே சோமசுந்தரம் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆரம்ப உரையையும் உளநலத்துறை விரிவுரையாளர் அருட்தந்தை எஸ். டேமியன் சிறப்புரையும் புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் நன்றியுரையும் நிகழ்த்துவர். (உ)

## இன்று

சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ள இரத்த அழுக்கப் பரிசோதனை இன்று சனி காலை 8.30 மணிக்கு கல்வியங்காடு கலைப்பிள்ளை வித்தியாலயத்தில் நடைபெறும். (த)

○ ○ ○

யாழ்.மாநகராட்சி மன்ற பொது சுகாதார பரிசோதகர் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8. 30 மணி முதல் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். (த-162)

○ ○ ○

ஆனைக்கோட்டை சாவற்காடு சனசமூக நிலையத்தில் இன்று காலை 9 மணியளவில் சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நடைபெற உள்ளது இதில் தொழுநோய் பற்றியும், இப்பகுதியில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட இருக்கின்றன.

வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வட பிராந்திய தொழுநோய் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர், சுகாதார போதனாசிரியர் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (ஓ-162)

○ ○ ○

மகளிர் அபிவிருத்தி நிலையம் யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவப் பிரிவுடன் இணைந்து நடத்தும் சுகாதாரக் கருத்தரங்கு இன்று பி ப. 1.30 மணிக்கு நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் நாவாந்துறை பகுதி சார் இளம் பெண்களும் தாய்மார்களும் பங்கு பற்றவுள்ளனர்.

இவர்களுக்கான விரிவுரைகளை யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்கள் முன் வந்து நடத்தவுள்ளனர். இவ்வைபவத்தில் ஆரம்ப நிகழ்வில் நாவாந்துறை பங்குத் தந்தை அருட் திரு றெஜினோ சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஓ

## உனைத்துதிப்போம்! திலீபா!!

ராகம் — ஆபோகி
தாளம் — ஆதி

**பல்லவி**

யுகம்பல கடந்தாலும் நாம்துதிப்போம் - நாடும்
சுகம்பல கிடைத்தாலும் உனைத்துதிப்போம் - திலீபா!
(யுக...)

**அனுபல்லவி**

வைசெழுத் தமிழ்கண்ட எங்கள் தலைவா - நிறை
வீர்புகழ் இராசையர் செல்வக்குமரா - திலீபா!
(யுக...)

**சரணம்**

உயிரிலும் உரிமைதான் உயர்வென்றவா - அந்த
உரிமைக்கு உணவோடு களம்வென்றவா - தமிழ்
உணர்வோடுன் உயிர்தந்தெம் உளம்வென்றவா - எம்
உணர்வோடு உணர்வாக நிலைகொண்டவா - திலீபா!
(யுக...)

— சரவணன்.

## காடு தரும் மழையில் நாடு பெறும் செல்வம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

# முக்கிய அறிவித்தல்

தியாகச்சுடர் திலீபனின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் 19-09-93 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் அனைத்து வர்த்தகர்களும், மற்றும் பொது மக்களும் கலந்துகொள்ளும் உண்ணாவிரதத்தை நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பிக்கவுள்ளது. நல்லூர் பிரதேச வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடி இந்த உணர்வுபூர்வமான உண்ணாவிரதத்தில் தவறாது பங்கு கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

- நன்றி

செயலாளர்:- தலைவர்:-

க. தனபாலசிங்கம் என். கே. குலசிங்கம்

(இ/5937)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னம்மா சுப்பிரமணியம்

(கடைக்கார சின்னப்புவின் மகள்)

காரைநகர் மல்லிகையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கடைக்கார சின்னப்புவின் மூத்தமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியுமாகிய அன்னம்மா 17-9-93 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் தவமணியின் அன்புத் தாயாரும், காரைநகர் களவிப்பிட்டி தெய்வநாயகம்பிள்ளையின் அருமை மாமியாரும், பொன்னம்பலம், சண்முகரத்தினம், நகுலேஸ்வரன், சரஸ்வதி, குகபரன், நாகேஸ்வரி (ஆயம்), மீனாம்பிகை ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், தர்சிகா, சஜனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19/1 B. A. தம்பி லேன், ஓட்டுமடத்தில் நிகழ்ந்து யாழ் கோம்பயன் மணல் மயானத்தில் நேற்று தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

தெய்வநாயகம்பிள்ளை குடும்பத்தினர்

19/1, B. A. தம்பிலேன்,
ஓட்டுமடம். (இ/5938)

## சின்னத்தம்பி கந்தவனம்

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தற்சமயம் 55/1, சீனியர் ஒழுங்கை, வண். வடகிழக்கு (கலட்டி) இல்லத்தில் வசிப்பவருமாகிய சின்னத்தம்பி கந்தவனம் நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிராசா, சந்திரசேகரம்பிள்ளை (வர்த்தகர் - வவுனியா), மகாலிங்கம் (திட்டமிடல் பணிப்பாளர், கிளிநொச்சி செயலகம்), சித்திரவடிவேல் (கனடா), காலஞ்சென்ற பூமகள், திருமகள், சிறிகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினி, பரமேஸ்வரி, இராஜலட்சுமி, செல்வேந்திரராணி (கனடா), போசராசா (டோகா) ஆகியோரின் அருமை மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

55/1, சீனியர் ஒழுங்கை, திருமகள்
வண். வடகிழக்கு (கலட்டி), (மகள்)
யாழ்ப்பாணம். (27352)

## திருமதி றெஜினா ஸ்ரனிஸ்லஸ்

யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திருமதி றெஜினா ஸ்ரனிஸ்லஸ் நேற்றுக் காலமானார்.

அன்னார் A.V. ஸ்ரனிஸ்லஸ் J.P. (இளைப்பாறிய ரயில் நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், என். சூரியகுமார், திருமதி ஜே நிலானி ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி பிரியா, திரு. ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜொனாதன், சோன், ஜனகன், ரீனா ஆகியோரின் அன்புப் பாட்டியும், செல்வி அந்தோனியா மனுவற்பிள்ளையின் அன்புச் சகோதரியும், ஜெகநாதன், மஜகநேசன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், ராணி, சந்திரமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18-09-93) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:

A.V. ஸ்ரனிஸ்லஸ் J.P.

65, 4 ஆம் குறுக்குத் தெரு, (கணவன்)
யாழ்ப்பாணம். (27357)

## ஜே. ஆருக்கு வயது 87

கொழும்பு. செப். 18

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது 87 ஆவது பிறந்த தினத்தை நேற்று கொண்டாடினார். (உ)

## சித்த மருத்துவத்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தை நடத்திய சித்த மருத்துவ மாணவர் மன்றப் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினர்.

சித்த மருத்துவத் துறையை தனிப்பீடமாக்க வேண்டும் என்று எமது சங்கம் விடுத்த கோரிக்கை குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் மருத்துவ விஞ்ஞான உப-குழு கடந்த 6 ஆம் திகதி கூடி ஆராய்ந்தது.

சித்த மருத்துவத் துறையை தனி நிறுவனமாகவோ அல்லது பீடமாகவோ விரைவில் மாற்றுவது என்றும் —

அதுவரை கலைப் பீடத்தில் இருந்து சித்த மருத்துவத் துறையை நீக்கி துணைவேந்தரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் ஒரு பிரிவாக அதனை இயக்குவது என்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக சித்த மருத்துவ மாணவர் சங்கத் தலைவர் தெரிவித்தார். (உ-8)

## யுத்தக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்பு கொண்டு தமது பெற்றோரும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரும் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டுமென்பதே தமது எதிர்பார்ப்பு என்றும் யுத்தக் கைதிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-3)

## தமிழீழ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்று திலீபனின் உருவப்படங்களுடன் கூடிய தேர்ப் பவனி ஒன்றை நடத்தினர். பறவைக் காவடியும் எடுத்து வரப்பட்டது. கொட்டடியில் லாண்றி விநாயகர் ஆலயத்தில் இருந்து இந்தப் பவனி நல்லூரை வந்தடைந்தது. திலக மக்கள் நாதஸ்வர இசையுடன் புரட்சி கீதங்கள் ஒலிக்க ஊர்வலமாகச் சென்றனர்.

நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் மாணவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் அடையாள உண்ணாவிரதத்தில் பங்குபற்றினர்.

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளிலும் நேற்று உண்ணாவிரதம் மற்றும் சிரமதானப் பணிகளில் மக்கள் ஈடுபட்டனர்.

தியாகி திலீபனின் வரலாற்றுக் கண்காட்சி ஒன்றும் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நல்லூர் தெற்கு வீதியில் அமைந்துள்ள கொட்டகையில் திறந்து வைக்கப்பட்டது.

பெரும் திரளான மக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

குடாநாட்டின் சகல இடங்களிலும், வன்னிப் பகுதிகளிலும் தென் தமிழீழப் பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

(ஓ-15-17-162-111-78)

## நீதிமன்ற..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்றம் உத்தரவிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

அந்த உத்தரவுப் பிரகாரம் தனது விசாரணையை கொழும்பு பிரதம நீதிவான் நேற்று ஆரம்பித்தார்.

மாணவர்கள் காணாமற் போனமைக்குக் காரணமான [illegible] அவர்கள் வற்புறுத்தி வந்தன என்பது தெரிந்ததே. (உ-6)

# ஆசியர் ஆதரவு வேட்பாளர் லண்டன் தேர்தலில் வெற்றி

லண்டன், செப். 18

ஆசியர்களுக்கு எதிராக இனக்கலவரங்கள் இடம் பெற்று வரும் கிழக்கு லண்டனில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் பிரிட்டனின் பிரதான கட்சிகள் தோற்கடிக்கப்பட்டன.

1982 இல் ஆரம்பிக்கப்பட்ட பிரித்தானிய தேசிய கட்சியின் வேட்பாளர் ஏழு வாக்குகள் வித்தியாசத்தில் தொழிற்கட்சி வேட்பாளரைத் தோற்கடித்தார்.

ஆசியர்களையும், கறுப்பினத்தவர்களையும் பாதுகாப்பது என்ற ஒரு கோஷத்தை மட்டும் முன் வைத்துப் போட்டியிட்ட நீல் பேக்கன் இத்தேர்தலில் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியை பிரிட்டனின் கன்சர்வேட்டிவ் கட்சி, தொழிற்கட்சி, லிபரல் கட்சி ஆகியன கண்டித்துள்ளன. (உ-6)

## குடாநாட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட ஆய்வின் பின்னர் வெளியிட்ட அறிக்கையில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சமூக மருத்துவத்துறையின் சிரேட்ட விரிவுரையாளர் டாக்டர் என். சிவராசா தலைமையில் நடத்தப்பட்ட போசாக்கின்மை பற்றிய ஆய்வு சம்பந்தமான ஆரம்ப அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் தவிர்ந்த யாழ். குடாநாட்டில் மூன்று வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 60 ஆயிரம் ஆகும். இவர்களில் நான்கு ஆயிரம் குழந்தைகள் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். மிகுதிக் குழந்தைகள் கிராமங்களில் உள்ளன. அவர்களில் பலர் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து தமது உறவினர் நண்பர்கள் வீடுகளில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

★ மூன்று வயதுக்குக் குறைந்த வயதுடைய குழந்தைகள் அங்கம் வகிக்கும் குடும்பங்களில் 55.3 சதவீதமானவை மாதம் 1500 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் உடையவை - 93.9 சதவீதமான குடும்பங்களின் வருமானம் 3,000 ரூபாவுக்குக் குறைவானதாகும். (நிவாரணமாகப் பெறும் பொருள்களின் பெறுமதியைச் சேர்த்தே வருமானம் கணக்கிடப்பட்டது).

★ மாதம் 4,500 ரூபாவுக்குக் கூடிய வருமானம் உள்ள குடும்பங்களைத் தவிர ஏனைய வருமான மட்டம் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் எல்லோரும் மிகமோசமான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

★ யாழ்ப்பாணத்தில் நிலவும் உணவுப் பற்றாக்குறையே குழந்தைகள் மத்தியில் நிலவும் போசாக்கின்மைக்குப் பிரதான காரணம் என்பதையே இது காட்டுகிறது.

★ குழந்தைகள் ஒரு வயதைப் பூர்த்தி செய்த பின்னரே போசாக்கின்மை அதிகரிக்கிறது.

★ இடம்பெயர்ந்து வாழும் காலம் அதிகரிக்க அதிகரிக்க அதே விகிதத்தில் போசாக்கின்மை விகிதமும் அதிகரிக்கிறது.

★ கடந்த பதினேழு வருடங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் குழந்தைகளின் போசாக்கின்மை 5 மடங்கு அதிகரித்திருக்கிறது. நாட்டின் ஏனைய பகுதிகளில் இரண்டு மடங்கு அதிகரிப்பு மட்டுமே.

குழந்தைகள் போஷாக்கின்மை அதிகரிப்புக்குக் காரணம்:-

★ 1. தொழில் இழப்புக் காரணமாக போதிய உணவு பெற முடியாமை.

2. உற்பத்திக் குறைவு

3. வருவாய் பெறும் ஆதாரமின்மை.

4. பொருள்களைக் கொள்வனவு செய்யும் சக்தி குறைந்தமை.

5. உணவுப் பொருள்களின் அளவுக்கு அதிகமான விலைகள். (அ)

## அம்பாறை காடுகளில் புலிகள்!

கொழும்பு, செப். 18

அம்பாறை மாவட்ட காடுகளில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "வெரித்தாஸ்" வானொலி அறிவித்தது.

அம்பாறை பக்மிற்றியாவ, சியம்பலாண்டுவ, வலத்தாப்பிற்றிய காடுகளிலேயே விடுதலைப் புலிகள் நடமாடுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-6)

## நிதி அமைச்சர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருப்பது குறித்து பிரதமர் ரணில் வெளிப்படையாகவே எதிர்ப்பைக் காட்ட ஆரம்பித்துள்ளார்.

என். எம். பெரேரா, ரொனி டி மெல் போன்றோர் நிதி அமைச்சர்களாக இருந்த காலத்தில் அவர்கள் நேரடியாக பல மாதங்கள் தமது நேரத்தைச் செலவிட்டு, மிகுந்த கவனம் எடுத்து நாட்டின் வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பது வழக்கம்.

ஆனால் இப்போது அவ்வாறு நேரடியான கவனிப்பு இல்லை.

மேலும் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களை ஆரம்பித்து வைப்பது போன்ற சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளுக்கு மட்டுமே ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வருகை தருவது வழக்கம்.

ஆகவே வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வருவது சம்பிரதாயங்களுக்கு இணங்கியதாக இருக்காது.

இந்நிலையில், அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை வேறோர் அமைச்சரோ அல்லது ராஜாங்க அமைச்சரோ நாடாளுமன்றில் சமர்ப்பிப்பது சம்பிரதாயத்துக்கு முரணானது மட்டுமல்ல நாடாளுமன்றத்தை இழிவுபடுத்துவதாகவும் அமையும் என அரசியல் விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இத்தகைய வரவு செலவுத் திட்டம் ஒன்றை வாசிக்கும்படி தன்னை ஜனாதிபதி கேட்டால் அதனை கடுமையாக ஆட்சேபிப்பது என ரணில் முடிவு செய்திருப்பதாகவும்—

பிரதமர் பதவியுடன் நிதி அமைச்சர் பதவியையும் தாமே பெற்று, நிதி அமைச்சர் என்ற வகையில் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க பிரதமர் ரணில் விரும்புவதாகவும் தெரிகிறது.

நிதி அமைச்சர் பதவியை வேறு ஒருவருக்கு வழங்காது ஜனாதிபதி தாமே வைத்திருப்பதற்குக் காரணம், பின்னர் தகுந்த நேரத்தில் அப்பதவியை காமினி திஸநாயக்கவுக்கு வழங்குவதற்காகவே என்றால்—

அதற்கு இடம் கொடுக்காமல் செய்வதற்கும் ரணில் உறுதி பூண்டுள்ளார்.

—இவ்வாறு "லக்திவ" மேலும் தெரிவித்திருக்கிறது. (உ-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org